IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE

(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

OS.NO. - 145/2009 (OS.No.30/2012)

P.W.1 - திருமதி.சாந்தி

DATE - 24.11.2025

குறுக்கு விசாரணை- 4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில்

எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்தேன் அதிலுள்ள விவரங்கள் எல்லாம் சரிதான். எனது முதல் விசாரணையில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களைப் பற்றிய விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் எம்.ஏ படித்துள்ளேன். இல்லத்தரசியாக உள்ளேன். எனது கணவர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உதவி மாவட்ட ஆட்சியராக வேலூரில் பணிபுரிந்து ஓய்வு பெற்றார். நான் வேலூரில் தாவா சொத்து வாங்குவதற்கு முன்பிருந்தே 40 வருடமாக வசித்து வருகிறேன். நானும் எனது கணவரும் சேர்ந்து சான்தினிகேதன் பள்ளியை 40 வருடமாக நடத்தி வருகிறோம் என்றால் சரி. தாவா சொத்து மேற்படி பள்ளியிலிருந்து 2 கி.மி தொலைவில் உள்ளது. எனக்கு சேரவேண்டிய 28 செண்ட் உரிமம் இல்லாமல் வேறோருவருக்கு கிரையம் செய்ததால் அது என்னுடைய சொத்து என விளம்புகை பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் சுவாதினம் என்னிடம் தான் உள்ளது. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையான ஆவணங்களில் சுவாதினம் என்னிடம் உள்ளது என்று காண்பிப்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. வழக்கு சொத்தில் சுவாதினத்தில் நான் இருக்கிறேன் என்பதற்கு ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தற்போது சொன்னால் கூட ஆவணத்தை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். தாவா சொத்தின் சுவாதினத்தை காண்பிப்பதற்கு என்ன ஆவணம் உள்ளது என்றால் காலி மனை என்பதால் கிரைய ஆவணம் உள்ளது. தாவா சொத்து வீட்டு வசதி வாரியத்திற்கு முன்னால் யாரிடம் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து

முதன் முதலில் யாருக்கு பாத்தியப்பட்டது என்று நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை. தாவா சொத்தை நான் சசிகலாவிடமிருந்து வாங்கினேன். வா.சா.ஆ.3 நான் சசிகலாவிடமிருந்து கிரைய பெற்ற ஆவணத்தின் அசல் ஆவணம் என்னிடம் தான் உள்ளது. வா.சா.ஆ.3 அசல் ஆவணத்தை தாக்கல் செய்யாததற்கு நான் எவ்வித காரணமும் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 அசல் ஆவணம் என்னிடம் தான் உள்ளது. வா.சா.ஆ.3 ஆவணம் எழுதி கொடுத்தவர் சாட்சி கையொப்பம் செய்தவர் உயிருடன் இருக்கிறார்களா என்பது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 உண்மையில் சசிகலா விற்றிருந்தால் அதனுடைய உண்மை தன்மை வெளிவரும் என்பதால் தான் நான் சசிகலா உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்பது பற்றி தெரியும் என்பதால் நான் சசிகலா உயிருடன் இருக்கிறாரா என்பது பற்றி தெரியாது என பொய்யா சொல்கிறேன் என்றால் சரியல்ல. சசிகலாவிற்கு சொத்தை யார் கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால் கஸ்தூரி அம்மாள். கஸ்தூரி அம்மாளுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் எழுதி கொடுத்த வா.சா.ஆ.2 ஆவணம் விவரம் எனக்கு தெரியவருமா என்றால் தெரியும். வா.சா.ஆ.2 அசல் ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.2 அசல் ஆவணம் தற்போது என்னிடம் தான் இருக்கிறது. சசிகலாஅம்மாளிடமிருந்து நான் சொத்தை வா.சா.ஆ.3 ல் வாங்கும்போது வில்லங்க சான்று பெற்று வில்லங்கம் குறித்து விசாரித்து வாங்கினேனா என்றால் நியாபகம் இல்லை. கஸ்தூரி அம்மாள் மேற்படி நிலத்தை வா.சா.ஆ.2 ல் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்திடமிருந்து வாங்கியது செல்லத்தக்கது தானா என்பது குறித்து வில்லங்கம் குறித்து விசாரித்தேனா என்றால் நினைவில்லை. நான் வில்லங்கம் குறித்து விசாரித்து தெரிந்துகொண்டு தான் சொத்தை வாங்கினேன் என்றால் வில்லங்கம் இருப்பது மாதிரி தெரிந்திருந்தால் சொத்தை வாங்கியிருக்க மாட்டேன்.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 24.11.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2025.11.24 19:41:57 +0530

Additional District Judge(FTC),

Vellore.